Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**STC No. 13/2022**

Depositions of - வெங்கடாசலம் ..witness for ...Petitioner Side Witness 1

| | |
|---|---|
| Name | - வெங்கடாச்சலம் (PW- 1 ) |
| Father's and Husband's name | - முருகேசன் |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.08.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு திருமதி . E. கவிதா, உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**எதிரி ஆஜர்.**

**குறுக்கு விசாரணை**

எனக்கும் எதிரி சுரேஷீக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 5 வருடங்களாக பழக்கம். எத்தனை வருடங்களாக எனக்கும், சுரேஷீக்கும் இடையே வரவு செலவு உள்ளது என்றால் 4 வருடங்களாக உள்ளது. இதற்கு முன்பு சுரேஷ் என்னிடம் நிறைய கடன்களை வாங்கி அதை திருப்பி செலுத்தி உள்ளார் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பழமுதிர் சோலை வைத்து நடத்திவருகிறேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சம் வரை வரும், ஏலத்தோட்டம் வைத்துள்ளேன். என்னிடம் 21.11.2021ம் தேதி சுரேஷ் என்பவர் 10 லட்சம் ரூபாய் வாங்கினார் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக என்ன தேதியிட்டு எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 21.01.2022 என்று தேதியிட்ட காசோலையை கொடுத்தார். பின்னர் 7 நாள்கள் கழித்து மீண்டும் என்னிடம், சுரேஷ் 28.11.2022 அன்று இன்னொரு 10 லட்சம் வாங்கினார் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக என்ன தேதியிட்டு எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 03.01.2022 என்று தேதியிட்ட காசோலையை கொடுத்தார். மேற்படி இரண்டு காசோலையையும் நான் தனித்தனியாக வேறு வேறு தேதிகளில் தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 21.01.2022ம் தேதியிட்ட காசோலையை எப்போது வசூலுக்கு செலுத்தினேன் என்றால் 01.02.2022ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தேன். 03.01.2022ம் தேதியிட்ட காசோலையை 03.02.2022ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தேன். 01.02.2022ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்த காசோலை என்ன தேதியில் திருப்பப்பட்டது என்றால் 02.02.2022ம் தேதி...

திருப்பப்பட்டது. 03.02.2022ம் தேதி தாக்கல் செய்த காசோலை என்ன தேதியில் திருப்பப்பட்டது என்றால் மறுநாள் 04.02.2022ம் தேதி திருப்பப்பட்டது. முதல் காசோலை திருப்பப்பட்டதற்கு நான் 04.02.2022ம் தேதி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் இரண்டாவது காசோலையை பற்றிய விவரங்களை கூறவில்லை என்றால் சரிதான். அதே போல் இரண்டாவது காசோலை திருப்பப்பட்டதற்கான வழக்கறிஞர் அறிவிப்பில் முதல் காசோலையை பற்றிய விவரங்களை கூறவில்லை என்றால் சரிதான். ஒரே நபர் கொடுத்த இரண்டு காசோலைகளை தனித்தனியாக தாக்கல் செய்து தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு ஏதேனும் காரணங்கள் உண்டா என்றால் இல்லை. தனித்தனியாக காசோலை கொடுத்ததால் தனித்தனியாக வசூலுக்கு தாக்கல் செய்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எதிரி எந்த ஒரு காலத்திலேயும் பணம் என்னிடம் கடன் வாங்கவில்லை என்பதால்தான், தனித்தனியாக காசோலை கொடுத்ததாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு அனுப்பிய பதிலறிவிப்பில், எதிரி கையெழுத்து மட்டும் போட்டு வைத்திருந்த காசோலைகள் மூன்றை திருடி சென்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், நான் காசோலைகளை திருடவில்லை. முதலில் திருப்பப்பட்ட காசோலைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 04.02.2022ம் தேதி அனுப்பினேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி எந்த தேதியில் வாங்கிக்கொண்டார் என்ற விவரத்தை எனது மனுவிலும், சத்திய பிரமாண நிரூபண வாக்குமூலத்திலேயும் சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டிருப்பார். 05.02.2022ம் தேதியில் எனது வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக 4வது ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 17.02.2022ம் தேதி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2வது காசோலை எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 04.02.2022ம் தேதி திருப்பப்பட்டது. அதற்கு எனது வழக்கறிஞர் மூலமாக 10.02.2022ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 11.02.2022ம் தேதி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். அதற்கு நான் 23.02.2022ல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு காசோலைகளுக்கான வழக்குகளிலும் எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 15 நாட்கள் கழித்து தாக்கல் செய்யாமல் 13 நாளில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றிய விவரங்கள் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். உண்மையிலேயே எதிரி எந்தவொரு காலத்திலேயும் என்னிடம் பணம் கடன்வாங்கவில்லைஎ ன்றும், அதற்கு ஆதரவாக நான் இரண்டு காசோலைகளும் கொடுக்கவில்லை என்றாலும் , எதிரியின் கம்பெனியில் இருந்து நான் திருடிச்சென்ற 3 காசோலைகளில் இரண்டு காசோலைகளில் எனது பெயரில் கலெக்ஷனுக்கு போட்டு, தவறுதலாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் எந்தெந்த தேதிகளில் பணம் ரூ.10 லட்சத்தை கொடுத்ததற்கான விவரத்தை, எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன் என்றால் இல்லை. பொதுவாக ஒருவருக்கு ரூ.25 ஆயிரத்து மேல் பணம் கடன் கொடுக்கும்போது அக்கவுண்ட் டிரான்ஸ்பர் தான் செய்யவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரே மாதத்தில் ரூ.20 லட்சம் பணம் கடன் கொடுக்கும் அளவிற்கு...

எனக்கு வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல, வசதியுள்ளது. மேற்படி ரூ.20 லட்சம் ரூபாயை நான் எனது அக்கவுண்ட்டில் வைத்து தான் எடுத்து கொடுத்தேன் என்றால் அக்கவுண்டிலும் இருந்தது, கையிலேயும் இருந்தது. எவ்வளவு அக்கவுண்டில் இருந்தது, எவ்வளவு கையில் இருந்தது என்றால் அக்கவுண்டடில் 11 லட்சம், மீதி பணம் கையில் இருந்தது. எந்த தேதியில் ரூ.11 லட்சம் பணத்தை வங்கி கணக்கில் எடுத்தேன் என்பதற்கான வங்கி பரிவர்த்தனைகள் அடங்கிய கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.08.30 13:41:52 +0530